விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 227 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 18 புதன்கிழமை (03.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ராஜபக்ஷவின் நிழல் அரசாங்கம்
# வன்முறை மூலமாக மக்களை அடக்குகின்றது
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



*(கொழும்பு)* ராஜபக்ஷ நிழல் அரசாங்கம் அரச வன்முறை மற்றும் அரச மிலேச்சத்தனத்தைப் பயன்படுத்தி மக்களை அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

### அரச ஊழியர்களுக்கு
## வெள்ளிக்கிழமை விடுமுறை இரத்து

(கொழும்பு)
எரிபொருள் பிரச்சினைகள் காரணமாக அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்ட விசேட விடுமுறை ▶11

### முல்லேரியா பிரதேச சபையின்
## முன்னாள் தலைவர் சுட்டுப் படுகொலை

(கொழும்பு)
முல்லேரியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ▶11

### ஆதரவு மாத்திரம் வழங்காமல்
## சர்வகட்சியில் கூட்டமைப்பு பங்காளியாக வேண்டும்
### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட ▶11

# ஜனாதிபதியுடன் இன்று கூட்டமைப்பு சந்திப்பு
## சர்வகட்சி அரசு, அரசியல் தீர்வு தொடர்பில் அவதானம் செலுத்தப்படலாம்

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இன்று சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மேற்கொள்ளும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இன்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

சர்வகட்சி அரசில் இணைவது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் இதில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

### சர்வகட்சி அரசில் இணைவது தொடர்பில்
## கூட்டமைப்பினர் ஒன்றுகூடி விரைவில் முடிவெடுப்பர்
### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)
சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி ரீதியான முடிவு ▶11

## அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

(கொழும்பு)
நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என வர்த்தக அமைச்சு தெரி ▶12

## கோவிட் மீண்டும் அதிகரிப்பு
## தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள்
### ஜனாதிபதி மக்களிடம் வேண்டுகோள்



(கொழும்பு)
கோவிட் ஆபத்து மீண்டும் அதிகரித்து வருவதால், கூடிய விரைவில் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் ▶11

## 7 கொரோனா பேர் மரணம்

(கொழும்பு)
நாட்டில்மேலும்7 கொரோனா இறப்புக்கள் பதிவாகியுள்ளன.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன் தினம் ▶11

# இந்தியாவின் ஆதரவு லங்கைக்கு தொடரும்
### பிரதமருக்கான வாழ்த்துச் செய்தியில் பாரத பிரதமர் மோடி தெரிவிப்பு



(புதுடில்லி
இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று பாரத பிரத ▶11

### சர்வகட்சி அரசாங்கத்தில்
## சிறுபான்மை பிரதிநிதியை பிரதமராக நியமிக்குக
### நளின் பண்டார கோரிக்கை

(கொழும்பு)
குறுகிய காலத்திற்காக அமைக்கப்படும் சர்வகட்சி அரசாங்கத்தில் சிறுபான்மையினப் பிரதிநிதியொருவரை பிரதமராக நிய ▶11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை பேரம்பலம்

பிறப்பு : 1940.04.28
இறப்பு : 2022.07.31

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டி கரவெட்டி கிழவித்தோட்டம் கட்டைவேலி நாவலர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் கடந்த 31.07.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சவுந்தலையம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் சவுந்தலாதேவி (லண்டன்), ரவிச்சந்திரன் (இலங்கை மதுவரித் திணைக்களம்), காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி மற்றும் பாமினிதேவி (லண்டன்), சுஜாதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் (நெடுந்தீவு), பசுபதி (நெடுந்தீவு), நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகிலவரதன் (லண்டன்), சிவகுமாரி (வடமராட்சி கல்வி வலயம்), மோகனகுமார் (லண்டன்), விக்னேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிபன் (லண்டன்), நிரோஜன் (லண்டன்), கினோயா (லண்டன்), மிதுன் (லண்டன்), ஹரணி (லண்டன்), ஆரூஸ் (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), ஆதீஸ் (லண்டன்), நிருஷிகன், சஞ்சயன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.08.2022) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் நாவலர்மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4694)

நாவலர்மடம்,
கரவெட்டி.

தகவல் :-
P. ரவிச்சந்திரன் (மகன்)
077 353 3990



## யாழ். அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் 14.08.2022 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணியளவில் கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும். இதில் பிள்ளையார் அடியார்கள், திருவிழா உபயகாரர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பணியில்
நிர்வாகம்

(12337)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

## கண்ணீர் அஞ்சலி



கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னாள் செயலாளர் திரு. ஸ்ரீதரன் அவர்களின் அன்பு மனைவி

திருமதி **பாலாம்பிகை ஸ்ரீதரன்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
கொக்குவில்.

(12333)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
14
07
1953

மறைவு
07
07
2022

எமது குடும்பத்தின் குலவிளக்கு அன்புத் தெய்வம்

அமரர்

திருமதி **இரகுபதி மங்களேஸ்வரி** [தேவி]

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஊடகங்களூடாகவும் அனுதாபம் தெரிவித்து எமது துயரைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், புலம்பெயர் உறவுகள் அனைவருக்கும் பதாகைகள் மூலம் தங்கள் துயரைப் பகிர்ந்தோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும் ஒளிப்படக் காட்சியைப் பதிவு செய்தோருக்கும் போசனமளித்துதவியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகள், யாத்திரை வரையும் உடனிருந்து பற்பல உதவிகள் புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.08.2022) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 06.08.2022 சனிக்கிழமை இல. 37/1 சிவநகர், உருத்திரபுரம் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-4692)

தகவல்

அ. இரகுபதி ( கணவர் - பராசித்த ஆயுர்வேத வைத்தியம் )
சி. சிறீகாந்தன் ( மருமகன் - RDA, கிளிநொச்சி )
சி. திருமகள் ( மகள் - RDA, பருத்தித்துறை )
இ. திருமுரளி ( மகன் - சுவிஸ் )
தி. தினோதினி ( மருமகள் - சுவிஸ் )
சி. திருப்பரன் ( மகன் - நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி )
தி. கௌசலா ( மருமகள் - NSB கொடிகாமம் )
மற்றும் பேரப்பிள்ளைகள்

இல. 37/1, சிவநகர்,
உருத்திரபுரம்.
077 788 5120
077 752 4090
077 923 5142

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த அச்சகமான கரிகணன் பிறிண்டேர்சின் முகாமைத்துவப் பணிப்பாளர்

**சிவஞானசுந்தரம் ராஜ்குமார்**

( ராஜ் )

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பிரிவால் துயருறும்
ரூபின்ஸ் வைத்தியசாலை
நெல்லியடி, கரவெட்டி.

(C-4697)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

இளைஞர்களும் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் களமாடும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுஅமைப்புகளும் ஓரணியில் திரண்டு எமக்கான குறுகியகால மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்படுவது அவசியம் என்றும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முழக்கத்தை முன்வைத்து செயற்படுவது வெற்றியளிக்காது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்து சக்திகளும்இணைந்த கலந்துரையாடல்களினூடு நீண்டகால, குறுகிய கால செயற்றிட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அவற்றை நடை முறைப் படுத்துவதற்கான வழி வரைபடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

குறுகிய அரசியல் இலாப நோக்கங்களைக் கைவிட்டு பரந்துபட்ட தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக சிந்திக்கும் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும். நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் இந்த கால கட்டத்தில் அவற்றை முதன்மைப்படுத்தி அதனூடாக இயலக்கூடிய அதிகபட்ச அதிகாரங்களை இடைக்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கான உபாயங்கள் வகுக்கப்படவேண்டும்.

அடித்தால் மொட்டை வைத்தால் குடுமி என்ற கணக்கில் சிந்திக்காமல். இடைக்காலத்தில் சாதிக்கக்கூடியவற்றைச் சாதித்துக்கொண்டு, பெற்றுக்கொள்ளக்கூடியவற்றைப் பெற்றுக் கொண்டு இறுதி இலட்சியத்தை நோக்கி முன்னேறுவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)

# நிரப்பு நிலையங்களை சூழ்ந்து நிற்போருக்கு எதிராக நடவடிக்கை

(குப்பிழான்)

வாகனங்களை வரிசையில் விட்டுவிட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சூழ அதிகளவானோர் நிற்பதை அனுமதிக்க வேண்டாம் எனவும், அதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுக்க வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தற்போது 'கியூஆர்' நடைமுறையின் கீழ் எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதனை ஒரு வாரத்துக்கு அவதானித்து அதன் பின்னர் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியான எரிபொருள் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதை ஆராயலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விமான நிலையம் செல்வோர் கொழும்புக்குச் செல்லும் வாகனங்களுக்குப் பிரதேச செயலரின் பரிந்துரையுடன் இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் (டிப்போ) எரிபொருள் நிரப்ப முடியும்.

அந்த வாகனத்துக்கு 'கியூ ஆர்' நடைமுறைக்கு அமைவாக 40 லீற்றர் டீசல் பெற முடியும் என்பதால் இலங்கை போக்குவரத்துச் சபை எஞ்சிய 60 லீற்றர் டீசலையே விநியோகிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மரக்கறிகளைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் இவ்வாறு டீசல் விநியோகிக்க இலங்கை போக்குவரத்துச் சபை இணங்கியுள்ளது. (4-18-33)



நெல்லியடி மத்திய கல்லூரி 2022 ஆம் ஆண்டுக்கான மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டுவிழா நேற்றுமுன்தினம் கல்லூரி அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

# பொலிஸாரின் தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப அனுமதி பெறப்பட வேண்டும்

### யாழ்.மாவட்ட செயலகத்தில் தீர்மானம்

(குப்பிழான்)

பொலிஸாரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கே எரிபொருள் நிரப்புவது எனவும், அவர்களின் தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதற்குப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக பிரதேச செயலரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் பிரதேச செயலர்கள், இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோருடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸார் தமது தனிப்பட்ட வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் பிரதேச செயலர்களால் எந்தெந்தப் பொலிஸ் நிலையத்தினர் அவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்ற விபரமும் முன் வைக்கப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸாரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதிப்பது எனவும், அலுவலகத் தேவைக்குத் தமது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தும் பொலிஸாரின் விபரங்களைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊடாக பிரதேச செயலகத்துக்கு சமர்ப்பித்துப் பிரதேச செயலரின் அனுமதி பெற்றே அதற்கு எரிபொருள் நிரப்பலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (4-18-33)

# வட்டுக்கோட்டையில் வாள்களுடன் நடமாடிய ஒருவர் சிக்கினார்

(அராலி)

வட்டுக்கோட்டையில் வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் நடமாடிய மூவரில் ஒருவர் சிக்கிக் கொண்டார். மேலும் இருவர் தப்பித்துள்ளனர்.

வட்டுக்கோட்டையில் திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி அதிகரித்துள்ள நிலையில் வாள்களுடன் மக்களை அச்சுறுத்தி வந்த நிலையில் ஒருவர் ஊர் இளைஞர்களிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சங்கரத்தைச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வட்டுத்தெற்கு மற்றும் மூளாய் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு வாள்களுடன் நடமாடியுள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் குறித்த மூவரும் வாள்களுடன் நடமாடியுள்ளனர். அதனை அவதானித்த வட்டுக்கோட்டை இளைஞர்களில் ஒருவர் சந்தேகம் கொண்டு வழிமறிக்க முற்பட்ட வேளை மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வீதியில் வீழ்ந்துள்ளனர்.

அவர்களில் இருவர் வாள்கள் இரண்டை கைவிட்டு தப்பித்த நிலையில் ஒருவர் காயங்களுடன் சிக்கிக்கொண்டார்.

சிக்கியவர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரண்டு வாள்கள் மற்றும் மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி எடுத்துச் சென்றனர். (4-33-104)

## நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இராண்டாம் திருவிழாவான இன்று புதன்கிழமை மாலை 6.45 முதல் 8.05 மணி வரை திருமுறை அரங்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பாட்டு-இ.திருஞான சம்பந்தன் ஓதுவார், உடன்பாடுபவர்-கு.மயூரி, வயலின்-அ.ஜெயராமன், ஆர்மோனியம்-ந.செல்வச்சந்திரன், மிருதங்கம்-ம.லோகேந்திரன், கடம்- அ.செல்வரட்ணம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 25 நாட்கள் இடம்பெறும் இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(படங்கள் சிவசாந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரை வென்றது தென்னாபிரிக்கா



இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது -20 போட்டியில், தென்னாபிரிக்கா அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரை 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி கைப்பற்றியது.

சவுத்தம்ப்டன் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 191 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரீஸா ஹென்ரிக்ஸ் 70 ஓட்டங்களையும் மார்கிரம் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வில்லி 3 விக்கெட்டுகளையும் கிறிஸ் ஜோர்தான் மற்றும் மொயின் அலி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 192 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 16.4 ஓவர்கள் நிறைவில், 101 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், தென்னாபிரிக்கா அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோனி பேயர்ஸ்டொவ் 27 ஓட்டங்களையும் ஜேஸன் ரோய் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், டப்ரைஸ் சம்ஸி 5 விக்கெட்டுகளையும் கேசவ் மஹாராஜ் 2 விக்கெட்டுகளையும் என்ரிச் நோட்ஜே, என்டில் பெலுக்வாயோ மற்றும் எய்டன் மார்கிரம் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக டப்ரைஸ் சம்ஸியும் தொடரின் நாயகனாக ரீஸா ஹென்ரிக்ஸும் தெரிவு செய்யப்பட்டனர். (4)

# இந்தியாவினை வீழ்த்தியது மேற்கிந்திய தீவுகள்



இந்தியா மற்றும் மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு -20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 139 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது. (4)


# சேவை நலன் பாராட்டு



யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியை

திருமதி
றெடெம்ரா யூட்சி ராஜீ
( SLTS - I )

Best Wishes!

மாணவர் வாழ்வும் வாக்கும் செம்மையுற வரலாற்றுப் பாடத்தில் மாகாண மற்றும் தேசிய மட்ட வெற்றிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டியாக இருந்து 20 வருட கல்விப் பணியில் அளப்பரிய சேவையினை வழங்கி 01.06.2022 அன்று ஓய்வு பெற்ற எமது கல்லூரியின் மதிப்புக்குரிய ஆசிரியை திருமதி றெடெம்ரா யூட்சி ராஜீ அவர்கள் கர்த்தரின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம் | - 15.03.1992 - 21.09.1993 |
| யா/ டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி | - 22.09.1993 - 31.08.1994 |
| மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம் | - 01.09.1994 - 05.02.1995 |
| யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம் | - 06.02.1995 - 08.05.1995 |
| யா/ டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி (பிரதி அதிபர்) | - 09.05.1995 - 10.02.2015 |
| யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி (உப அதிபர், பகுதித் தலைவர்) | - 11.02.2015 - 01.06.2022 |

(C-4696)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
மீசாலை


# மரண அறிவித்தல்



சங்கீத பூஷணம், கலாபூஷணம்

## திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன்

(முன்னாள் விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கீத பூஷணம், கலாபூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் நேற்று (02.08.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் முத்துவேல் - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் மருத்துவக் கலாநிதி கந்தையா சிதம்பரநாதனின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான வாசுகி, கௌசி (லண்டன்) மற்றும் ஞானகணேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகராஜா, ரவிசங்கர் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் அவருடைய தற்போதைய வதிவிடமான இல 168, ஆனந்த நகர் டிப்போ வீதி (சேவியர் கடைச் சந்திக்கு அண்மையில்) கிளிநொச்சியில் நடைபெற்று நாளை (04.08.2022) வியாழக்கிழமை ஆனந்தநகர் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஞானகணேசன் (மகன்)
தியாகராஜா (மருமகன்)
077 481 7879
(C-4698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில்கடுமையான கோதுமை மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கு கோதுமை மா பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது கோதுமை மாவுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்றது.

எரிபொருள் நெருக்கடியால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு 50 கிலோகிராம் கோதுமை மா மூடையை கொண்டு செல்லும் போது ஒரு மூடைக்கு 300 ரூபாய் மேலதிகமாக அறவிடப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து மருதானைக்கு கடந்த காலங்களில் தொடரூந்தில் கோதுமை மா கொண்டு செல்லப்பட்டதாகவும், தற்போது தொடரூந்தில் கோதுமை மா கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல், பெற்றோலுடன் ஒருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் பகுதியில் ஒயில் கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 165 லீற்றர் டீசல் மற்றும் 25 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய ஒயில் கடையில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த டீசல் மற்றும் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி

சந்நிதியான் மடியில் 1971 . 09 . 21

சந்நிதியான் திருவடியில் 2022 . 07 . 20



## அமரர். சிவானந்தஐயர் செல்வக்குமார் ஐயர்

ஐந்தாம் வயதினிலே ஈன்ற தாயும் உன்னைப் பிரிந்தார்
பதினெட்டாம் வயதினிலே
உன்னைத் தாங்கிய தந்தையும் பிரிந்தார்
உன் முயற்சியால் வாழ்வில் உயர்ந்தாய்
இப்போ ஏன் உன் சகோதரிகள் எம்மிடம்
சொல்லாது சென்றாய் வெகுதூரம்?
அண்ணா அண்ணா அண்ணா
எப்போ வருவாய்?

(c-4691)

அன்னாரின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நாளை (04.08.2022) வியாழக்கிழமை பொன்னொளி வாசிகசாலைக்கு அருகிலே அமைந்துள்ள ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மடத்தில் நடைபெறும். மதியபோசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் மனம் உடைந்த அன்புச் சகோதரிகள்
சிவானந்தஐயர் செல்வக்குமாரி, சிவானந்தஐயர் செல்வறோஜா
தொலைபேசி இலக்கம் 076 009 6288

செல்வச்சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

# இராசிபலன்

03.08.2022
ஆடி 18, புதன்கிழமை
சஷ்டி பின்னிரவு 2.42 மணிவரை
அத்தம் பிற்பகல் 04.36 மணிவரை
சுபநேரம்- 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் - 12.04-1.34மணிவரை
சஷ்டி விரதம், ஆடிப்பெருக்கு
சந்திராஷ்டமம்-சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**இடபம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மிதுனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவுகளை செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் சந்திப்பால் குதூகலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியை கொடுக்கும், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள், கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மீனம்** சொந்தபந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்தடைவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமை[illegible] வேர்களை விடும்.

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## சரியான அடி!

(நேற்றைய தொடர்ச்சி)

அதனால் கந்தன் இரவில் தூங்கியதும் கிழவியின் மகன் அந்தத் தட்டைக் கந்தனிடமிருந்து எடுத்துக் கொண்டு அதற்குப்பதிலாக அதே போன்ற ஒரு வெங்கலத் தட்டை வைத்து விட்டான்.

அதை அறியாத கந்தன் மறுநாள் காலை அங்கிருந்து கிளம்பி தன் ஊரை அடைந்தான். அவன் தன் தந்தையிடம் தான் கொண்டு வந்துள்ள வெங்கலத்தட்டைப் பற்றிக் கூறி "இதோ பாருங்கள் சாப்பாடு வரவழைக்கிறேன்" என்று தட்டை எடுத்துத் தட்டி சாப்பாடு போடு என்றான். ஆனால் எவ்வளவு தடவை முயன்றும் தட்டு சாப்பாட்டைத் தரவில்லை.

அவனது தந்தை கோபம் கொண்டு "இந்த தடவையும் உன்னை யாரோ ஏமாற்றி விட்டான். நீ எதற்கும் உதவாதவன். போ போ என்று கூறி அவனை விரட்டி விடவே அவன் மறுபடியும் வேலை தேடிக் கொண்டு கிளம்பினான். அவன் போய்க் கொண்டே ஒரு கால்வாய்க் கரையை அடைந்தான். அங்கு ஒரு மரத்தை ஒரு கிழவன் வெட்டிக் கொண்டிருப்பதை அவன் கண்டான்.

கந்தன் அவனிடம் "கிழவரே! இதை ஏன் வெட்டுகிறீர்கள்?" என்று கேட்க அவரும் "இந்தக் கால்வாயின் மேல் இதைப் பாலம் போல் போடப் போகிறேன்" என்றான். அதைக் கேட்ட கந்தன் "கோடலியை இப்படிக் கொடுங்கள் நான் வெட்டிப் போடுகிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம்" என்று கூறிக் கிழவனிடமிருந்து கோடலியை வாங்கி அடிமரத்தில் வெட்டி அதைச் சாய்த்து கால்வாயின் குறுக்கே பாலம் போல விழச் செய்தான்.



அது கண்டு கிழவன் மகிழ்ந்து "நீ செய்த உதவிக்குப் பதிலாக இந்தத் தடியைக் கொடுக்கிறேன். நீ யாரை அடிக்க நினைத்தாலும் இது அவனை அடித்துக் கொண்டே இருக்கும். நீ போதும் என்றதுமே அது அடிப்பதை நிறுத்தி உன் கைக்கே வந்து விடும்" என்று கூறி ஒரு தடியைக் கொடுத்தார்.

கந்தனும் அதை வாங்கி "எங்கே காற்றை அடி பார்க்கலாம்" என்றான். உடனே அத்தடி உயரப் போய் காற்றை அடிப் பது போல மேலும் கீழும் அசைந்தது. அவன் போதும் என்றதும் தடி அவன் கைக்கு வந்து விட்டது.

தன்னை ஒருவேளை ஊட்டுப்பிறைக் கிழவியும் அவள் மகனும் ஏமாற்றி விட்டார்களோ என்ற சந்தேகம் அப்போதுதான் அவனுக்கு வந்தது. உடனே தடியோடு அவன் அந்த ஊருக்குப் போய் ஊட்டுப் பிறையை அடைந்தான்.

அவன் கிழவியிடம் "என்ன பாட்டி! என்னை தெரிகிறதா?" என்று கேட்கவே அவள் "தெரியவில்லையே!" என்றாள். அப்போது அவளருகே இருந்த அவள் மகனும் "இவன் யார்?" என்று கேட்டான். கந்தனும் "நீதானே என் கழுதையையும் வெங்கலத்தட்டையும் திருடியவன்?" என்று கேட்டான்.


"இல்லையே" என்று கிழவியின் மகன் கூற கந்தன் தன் தடியை எடுத்து அவனை அடிக்கச் சொன்னான். அது நிறுத்தாமல் அவனை அடித்தக் கொண்டே இருந்தது. வலி தாங்க முடியால் அவன் "ஆமாம். அவற்றை நான்தான் திருடினேன். கொடுத்து விடுகிறேன். என்னை மன்னித்து விடு" என்று கந்தனிடம் கெஞ்சினான்.

கந்தனும் "போதும்" என்றான். எனவே தடி அவனிடம் வந்துவிட்டது. கந்தன் தட்டை வாங்கிக் கொண்டு தன் கழுதை மீதேறி தடியுடன் தன் ஊருக்குச் சென்றான்.தான் அடைந்த பொருட்களால் அவன் பெரிய பணக்காரனானான். அவன் முத்தாயியை மணந்து கொண்டு அங்கு சுகமாக வாழலானான்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## இந்திர விழா




தனக்குச் சம்மதித்த பெண் போலவே இவளும் ஒழுக்கம் கெட்டவள் என்று மனைவியைச் சந்தேகிப்பது குடிகாரர்களுக்கும் ஒழுக்கமில்லாத குடியில் பிறந்தவர்களுக்குமே உரித்தான வழக்கம்.

எதனாலோ கோவலன் மனம் அப்போது கண்ணகியை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தது. அவள் என்றைக்காவது இப்படி சிங்காரித்துக கொண்டு வேற்று ஆண்களின் எதிரில் தோன்றிச் சிரித்திருப்பாளா? வாய்ப்பே இல்லை! பயிர்ப்பு என்பது குலப்பெண்களுக்கு மட்டுமே உரித்தான குணம். அதைக் கணிகையர் குலத்தில் பிறந்த மாவியிடம் எதிர்பார்ப்பது அறிவீனமோ? கோவலன் யோசிக்க ஆரம்பித்தான்.

அதுவரை மாதிவியை ஓர் அழகியாக மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த அவன் இப்போது அவளைக் கணிகையாகப் பார்க்க ஆரம்பித்தான்.

உணர்வுகளால் மட்டுமே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அறிவால் பார்க்கத் தொடங்கினான்.

எப்போது உறவுகளையும் நட்பையும் அறிவுகொண்டு பார்க்க ஆரம்பிக்கிறோமோ அப்போது அன்பு வலுவிழக்க ஆரம்பித்திருக்கிறது என்று அர்த்தம்.

ஏனெனில், அன்பு ஒருபோதும் காரண காரியங்களைப் பார்ப்பது கிடையாது.

தன் மனத்தில் ஓடும் எண்ணங்களைக் கோவலன் அப்போதைக்கு மறைத்து வைக்கவே விரும்பினான்.

ஆனால், அவை மிக விரைவில் தன்னையும் அறியாமல் வெளிவரப்போவதையும், அதனால் வரப் போகும் விளைவுகளையும் அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 42

இது அரைவாசியிலும் குறைவாகும். கீவ் நகரம் மிகவும் குறைவான பிரதிநிதித்துவப் பிரதேசமாக இருந்தது.

சோவியத் யூனியனில் இருந்து உக்ரைன் பிரிந்த பிறகு நடந்த முதல் தேர்தல் இதுவாகும். இத் தேர்தல்களில், பாராளுமன்றத்தில் (Verkhovna Rada) உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி, முதல் இரண்டு சுற்றுகளில் முடிவு செய்யப்பட்ட 338 இடங்களில் 86 இடங்களில் வெற்றி பெற்று மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. இத் தேர்தலுக்கு வாக்களிக்க 38,204,100 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 28,963,982 பேர் வாக்களித்தனர். செல்லுப்படியற்ற வாக்குகள் 1,821,350 ஆகும். வாக்களிப்பு வீதம் 75.81% ஆகும். 1994-1997 வரை 4 பிரதம மந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் நால்வரும் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாவர்.

**பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடு காரணமாக பல மாவட்டங்களில் ஒதுக்கப்பட்ட ஆசனத் தொகைக் கேற்ப முழுப்பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. உதாரணமாக கீவ் நகரத்தில் பாராளுமன்றத்தில் கீவ் நகரத்திற்கு 10 பிரதிநிதிகள் மட்டுமே இருந்தனர். ஆனால் ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை 23 ஆகும்.**

**1994 உக்ரைனிய ஜனாதிபதி தேர்தல்**

26 ஜூன் 1994 இல் உக்ரைனில் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டன, இரண்டாவது சுற்று ஜூலை 10 அன்று நடைபெற்றது. ஜனாதிபதி லியோனிட் கிராவ்சுக் மற்றும் வெர்கோவ்னா ராடா (பாராளுமன்றம்) இடையே சமரசம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல்கள் திட்டமிடலுக்கு முன்னதாகவே நடத்தப்பட்டன. தேர்தலில் அப்போதிருந்த க்ராவ்சுக் அவரது முன்னாள் பிரதமர் லியோனிட் குச்மாவால் தோற்கடிக்கப்பட்டார். கொமன்வெல்த் சுதந்திர நாடுகளின் முதல் ஜனாதிபதித் தேர்தல்களாகும், குச்மா ஜூலை 19 அன்று பதவியேற்றார், இது கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு முதல் அமைதியான அதிகார பரிமாற்றம் ஆகும். தேர்தலின் முதல் சுற்றில் 7 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தலின் முதல் சுற்றில் க்ராவ்சுக் (Krav chuk) 9,977,766 (38.4%) வாக்குகளையும் லியோனிட் குச்மா (Leonid Kuchma) 8,274,806 வாக்குகளையும் பெற்று முதல் இரு இடங்களில் இருந்தனர். இவர்கள் இருவரும் 50% க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாததால் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு 1994 ஜூலை 10 இல் நடந்தது. இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் லியோனிட் குச்மா (Leonid Kuchma) 14,016,850 (52.4%) வாக்குகளையும் க்ராவ்சுக் (Kravchuk) 12,111,603 (45.2%) வாக்குகளையும் பெற்றனர். இதன்படி லியோ னிட் குச்மா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். கிரிமியா, செவஸ்டோபோல் மற்றும் கருங்கடல் கடற்படை ஆகியவற்றின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பிரச்சினைகள் உக்ரைனின் சுதந்திரத்திற்குப் பிந்தைய முட்கள் நிறைந்த பிரச்சனையாக அமைந்தது மட்டுமல்லாமல், பிராந்தியத்தில் அமைதிக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது.




வாசில் டர்டினெட்ஸ்
பதில் பிரதம மந்திரி
1997



வலேரி
பிரதம மந்திரி
1997-1999

உக்ரைன் நாட்டு பிரதம மந்திரிகள் 1994-1997



விட்டலி மசோல
Vitaliy Masol
1994-1995



யெவ்ஹேன் மார்ச்சுக்
Yevhen Marchuk
1995-1996



பால் லாசரென்கோ
Pavlo Lazarenko
1996-1997

(தொடரும்)

# பொருளாதார நெருக்கடிகளால் ஆடைத் தொழிற்சாலைகளை மூடும் நிலை

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக ஆடை உற்பத்தி துறை வீழ்ச்சியடைந்துள்ளதோடு, ஆடை தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என வர்த்தக வலய சேவையாளர்களின், தேசிய மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் காமினி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி, மின்சார நெருக்கடி போன்றவற்றினால் ஆடை உற்பத்தி துறையானது பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடியினால் உரிய நேரத்தில் தங்களது உற்பத்திகளை வழங்க முடியாது போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் சர்வதேசத்திடமிருந்து இலங்கை பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# கோட்டாவுக்கு சிறப்பு சலுகைகள் எவையும் வழங்கப்படவில்லை

## சிங்கப்பூர் அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எந்தவித சலுகைகளும் வழங்கப்படவில்லை என சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெரால்ட் கியாமின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (நி)

# வறிய மாணவர்களுக்கு இலவச பயிற்சி புத்தகங்கள்

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

வறிய மாணவர்களுக்கு இலவச பயிற்சிப் புத்தகங்களை வழங்குவதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வரு வதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கைகான பயிற்சிப் புத்தகங்களை அரச அச்சகத் திணைக்களத்தினால் அச்சிடப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக இந்தியாவில் இருந்துமை



மற்றும் காகிதம் ஆகியவற்றினை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவது குறித்தும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கட்சி தாவவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், 20 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிதாவ உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, கபீர் ஹாசிம், மயந்த திஸாநாயக்க, அலவத்துவல, அஜித் மன்னப்பெரும மற்றும் கிங்ஸ் நெல்சன் ஆகியோர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேபோன்று ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும, நாலக கொடஹேவா, சன்ன ஜயசுமன, உதயன கிரிந்திகொட, வசந்த யாப்பா பண்டார, டிலான் பெரேரா, திலக் ராஜபக்ச, உபுல் கலப்பட்டி, சரத் குமாரசிறி மற்றும் லலித் எல்லாவல ஆகியோர் எதிர்க்கட்சியில் அமரவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (நி)

# சீரற்ற காலநிலையினால் நுவரெலியாவில் 6 பேர் பலி

(நுவரெலியா)

சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் 6 பேர் உயிரிழந்ததாக முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். டுவிட்டர் பதிவொன்றில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியை
# திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் அவர்களின் மணிவிழா வாழ்த்து



**அருளாசிச் செய்தி**

யாழ்ப்பாணம் கோப்பாய் கிராமத்தில் சிறந்த சைவபரம்பரையில் உதித்த சுப்பிரமணிய ஆசிரியர் மகேஸ்வரி தம்பதிகளுக்கு தவப்பயனாக ஏகபுதல்வியாக பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வியை கோப்பாய் வடக்கு சரவண பவானந்தா வித்தியாசாலையில் கற்று தனது உயர்கல்வியை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கற்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து மேலும் பல உயர்கல்வியைக் கற்று பல்கலையும் பெற்று தனது ஆசிரியராக தனது சேவையை நீர்வேலி R.C பாடசாலையில் ஆரம்பித்து உரும்பிராய், வயாவிளான், கரந்தன், கோப்பாய்,நீர்வேலி, ஊரெழு ஆகிய ஊர்களில் உள்ள பாடசாலைகளில் பட்டம் பெற்ற சங்கீத ஆசிரியராக கடமையாற்றி (2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 வரையில்) கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நூலக ஆசிரியராக பணியாற்றி தனது 60 வயதில் ஓய்வு பெற இருக்கும் ஆசிரியை திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் அவர்களை மணிவிழா காணும் இவ்வேளையில் எல்லாம் வல்ல சித்திரவேல் பெருமானுடைய திருவருள் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்றும் மேலும் ஓய்வு காலத்தில் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ இறைவனுடைய திருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.

*பிரதமகுரு, சிவஸ்ரீபூரணி , கீதச்சந்திர குருக்கள்,*
*ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில்,*
*கோப்பாய் வடக்கு, கோப்பாய்.*



**மணிவிழாக் காணும் ஆசிரியருக்கு வாழ்த்து**

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிந்து 02.08.2022 இல் ஓய்வு பெறும் திருமதி.மங்கையர்க்கரசி சிவநேசராஜன் அவர்கள் சங்கீதத் துறையில் ஆசிரியராக தடம் பதித்து முப்பத்துமூன்று வருடங்கள் கல்விப் பணிபுரிந்து நிறைவான சேவையை எமது மாணவச் செல்வங்களுக்கு வழங்கியுள்ளார்.

இவர் சங்கீதத் துறையுடன் நூலக விஞ்ஞானத் துறையில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்து தனது ஆளுமையை மேலும் விருத்தி செய்ததோடு மாணவர்களுக்கு கற்பித்தலில் மட்டுமன்றி பல மேலதிக செயற்பாடுகளின் மூலம் நூலறிவையும் வளர்ப்பதற்கு வழிகாட்டியாக திகழ்ந்துள்ளார்.

இவ்வளவு காலமும் இவர் கல்விச் சமூகத்துக்கு வழங்கிய சீரிய பணியை பாராட்டுவதுடன் மணிவிழா நாளில் எல்லா சிறப்புக்களையும் பெற்று தனது குடும்பத்தாருடன் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

*திரு.முத்து இராதாகிருஷ்ணன்*
*வலயக் கல்விப் பணிப்பாளர்*
*யாழ்ப்பாணக் கல்வி வலயம்.*



**திருமதி.மங்கையர்க்கரசி சிவநேசராஜன் SLTS-I**
**கர்நாடக சங்கீதம் பயிற்சி, சங்கீத கலாவித்தகர்**
Dip in Library Science

திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் Music Trd
சங்கீத கலாவித்தகர் Dip in Library Science.
யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை
27.11.1989- 31.12.1989
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்
01.01.1990- 04.02.1991
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
05.02.1991- 31.12.1992
யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
01.01.1993- 31.08.1993
யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
01.09.1993- 23.03.1993
யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்
24.03.1993 - 03.04.2012
யா/ நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை
04.04.2012- 12.03.2013
யா/ஊரெழு கணேச வித்தியாலயம் (நூலக ஆசிரியர்)
13.03.2013-03.07.2015
யா/கோப்பாய் கிறிஸ்தவ கலலூரி (நூலக ஆசிரியர்)
04.07.2015-02.08.2022

(12316)



**மணிவிழா வாழ்த்துக்கள்**

இன்றையதினம் மணிவிழாக் காணும். எமது கல்லூரியின் நூலக ஆசிரியர் திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் அவர்களை வாழ்த்த கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமையடைகின்றேன்.

சவால் நிறைந்த துறையாக மாறிவரும் கல்வித்துறையில் ஆசிரியராகப் பணிபுரிவதென்பது கடினமானதொரு பணியாகும். 1989 ஆம் ஆண்டில் நியமனம் பெற்று தற்போது வரை பணியாற்றி ஓய்வு நிலையையடைந்திருக்கும் திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் இப்பாடசாலையில் நூலக ஆசிரியராக நியமனத்தைப் பொறுப்பேற்றவர். இன்று வரை எமது கல்லூரியின் நூலகத்தினை வழிநடத்தி வந்தவர். தனது விடுமுறை நாட்களிலும் பாடசாலை நூலகத்தை ஒழுங்குபடுத்துவதில் சக ஆசிரியர்களுடன் இணைந்து செயற்பட்டவர்.

சங்கீத ஆசிரியராகவும் அதன் பின்னர் நூலக ஆசிரியராகவும் பணியாற்றிய மணிவிழா நாயகி பல பாடசாலைகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு சிறப்பான பணியை ஆற்றினார். நூலகப் பணிகளுக்கு மேலதிகமாக பாடசாலை சார்ந்த பத்திரிகை செய்திகளை வழங்கி ஆவணப்படுத்தும் கைங்கரியத்தையும் ஆற்றி வந்தார். அவரது பணிகளுக்கு, கல்வித்துறையில் கடமையாற்றும் துணைவர் பக்கபலமாக இருந்தார் எனின் அது மிகையன்று.

திருமதி.மங்கையர்க்கரசி சிவநேசராஜன் அவர்கள் ஓய்வு காலத்திலும் தனது குடும்பத்தவருடன் சிறந்த ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திரு.ச.வேலழகன், அதிபர்.*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி*



**மணிவிழா வாழ்த்துக்கள்**

இன்று தனது ஆசிரிய சேவையினை நிறைவு செய்து ஓய்வு நிலைக்கு செல்லும் திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் ஆசிரியைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் கல்லூரியின் அயலவன் என்ற ரீதியில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இசைத்துறையில் தனது பயிற்சியினை முடித்து கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்று முப்பத்துமூன்று வருடங்களாக பல பாடசாலைகளில் சங்கீதக் கல்வி மூலம் பல மாணவர்களை சிறந்த நிலைக்கு உயர்த்திய பெருமை இவரையே சாரும்.

அத்துடன் கடந்த பத்து வருடங்களாக நூலக ஆசிரியராகப் பணியாற்றி இசைத்துறைக்கு அப்பாலும் தன்னால் பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்து இத்துறையின் மூலம் மாணவர்களின் வாசிக்கும் பழக்கத்திற்கு மெருகூட்டியவர் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இப்பணிகளை இவர் செய்ய கடவுள் கொடுத்த அருளுக்காக கடவுளுக்கு நானும் எனது சபை மக்களும் நன்றி கூறுகின்றோம் இறை ஆசிகள் உங்களோடு இருப்பதாக.

*அருட்பணி நா.யோ.ஞானகாருண்யன்*
*முகாமைக் குரு*
*தூய கன்னி மரியாள் ஆலயம்*
*கோப்பாய் மத்தி,கோப்பாய்.*



**மணிவிழா வாழ்த்துக்கள்**

சான்றோர்கள் நிறைந்து வாழுகின்ற கோப்பாய் கிராமத்தில் கல்விப்புலம் சார் குடும்பப் பின்னணியில் வளர்ந்து இன்று நல்லாசிரியராக யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பணியாற்றி 2022.08.02 ஆம் திகதியில் ஓய்வு பெறுவதையிட்டு மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சங்கீத பாடத்தில் உயர்கல்வி கற்ற இவ்வாசிரியர் ஏராளமான மாணவர்களை அத்துறையின் பால் உயர்சித்தியடைய வைத்ததுடன் தமிழ்த்தினப் போட்டி, ஏனைய நிறுவனங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மாணவர்களை பங்குபெற வைத்து உயர் பெறுபேறுகளை பெற வைத்தவர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடந்த ஏழாண்டுகளாக நூலகத்தை பொறுப்பேற்று மாணவர்களைத் தேடி வகுப்பறைக்குச் சென்று நூல்களுக்கு சேதம் விளைவிக்காது எவ்வாறு வாசிப்பது என்பதை தெளிவுபடுத்தி பல மாணவர்களுக்கு இரவல் வழங்கி வாசிப்புத்திறனை ஊக்குவித்தவர்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பதன் தொனிப்பொருளை சகல மாணவர் மனதில் பதிய வைத்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஓர் அறிவுப் புரட்சியை ஏற்படுத்தி ஓய்வு பெறும் திருமதி. மங்கையர்க்கரசி சிவநேசராஜன் எல்லா நலன்களும் பெற்று குடும்பத்தாருடன் இனிதே வாழ வாழ்த்துகிறேன்.

*நா.சிவநேசன்*
*கோட்டக் கல்விப்பணிப்பாளர்*
*கோப்பாய் கல்விக்கோட்டம்.*



**மங்கையர் திலகத்திற்கு மணிவிழா வாழ்த்துக்கள்**

கல்விப் பணியை பரம்பரைப் பணியாகக் கொண்டமைந்த குலத்தில் உதித்தவரும் பிரபல விஞ்ஞான ஆசிரியரின் துணைவியுமான மங்கையர்க்கரசியின் முப்பத்து மூன்றாண்டுகளின் கல்விச் சேவையினை கௌரவிக்கும் பொருட்டு அவரது மணிவிழாவில் வாழ்த்து தெரிவிப்பதில் கிடைத்த சந்தர்ப்பத்தை பேறாகக் கருதுகின்றேன்.

தமிழில் பாண்டித்தியம் பெற்ற பண்டிதரான தந்தையின் புதல்வி உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையை யாழ். வேம்படி உயர்தர மகளிர் பாடசாலையில் கற்று தொழில்முறைக் கல்வியாக இசைத் துறையைப் பயின்று ஆசிரியராக மிளிர்ந்திருப்பது குடும்பத்தின் புகழுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. கர்நாடக சங்கீதத்தினை முறையூக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று முறையான ஆசிரியராகியது மட்டுமல்லாது சங்கீத கலாவித்தகர் என்னும் பட்டத்தினையும் தன்னகத்தே கொண்டுள்ளார். வயலின் இசைப்பதனை முறையாகப் பயின்று அதனை நேர்த்தியாக வாசிக்கும் திறனுடையவர் மட்டுமல்ல தன்னுடைய ஆற்றல்களை பல்வேறு துறைகளிலே வளர்த்துமுள்ளார். அந்தவகையில் நூலகத்துறை டிப்ளோமா தகைமையையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 2013 ஆம் ஆண்டிலிருந்து நூலக ஆசிரியராக தனது கடமையை மாற்றியிருந்தார். தான் பிறந்த கிராமமான கோப்பாய் கிராமத்தின் தாய்ப் பாடசாலையான கிறிஸ்தவ கல்லூரியில் ஏழு ஆண்டுகள் நூலக ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுநிலை கண்டு மணிவிழா காண்பதையிட்டு உண்மையில் மங்கை ஆசிரியர் பெருமை கொள்ள வேண்டும்.இவ்வாறான தகைமைகளைக் கொண்ட ஓர் ஆசிரியருக்கு மணிவிழாவை முன்னெடுப்பதையிட்டு கல்லூரியும் பெருமை கொள்கிறது. தான் பெற்ற ஆற்றல்கள். அனுபவங்களை உரியமுறையில் மாணவர்களுக்கு எடுத்துரைப்பதிலும் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் இவர் சகல ஆசிரியர்களுடனும் சரளமாக உரையாடுவதும் கேள்வி விசாரணைகள் மூலம் விடயங்களில் தெளிவு பெறுவதும் இவரது விசேட ஞானமாகும். இவ்வாறான சிறப்பான அனுபவம் மிக்க நூலக ஆசிரியருக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஓய்வு காலத்தில் உடல்; உள, சமூக ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

*பா. லோகேஸ்வரன்*
*தலைவர்*
*ஆசிரியர் கழகம்*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*


## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 37ம் ஆண்டு குருபூசை

இடம் :- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் :- 04.08.2022 (வியாழக்கிழமை)



காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் குருபூசை நிகழ்வு சிறப்பாக இடம்பெறவுள்ளது.



சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து குருவருளும் திருவருளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (12320) சந்நிதியான் ஆச்சிரமம்.


## அரிசி இறக்குமதியை நிறுத்த தீர்மானம் - விவசாய அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் அரிசி இறக்கு மதியை தற்காலிகமாக நிறுத்து வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு ள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.விவசாய விதை இறக்குமதி யாளர்கள் சங்கத்தின ருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு அறி வித்துள்ளார்.

மேலும். கடந்த போகங் களை விட இந்த போகத்தில் எதிர்பார்த்தமையை விடவும் அதிக நெல் அறுவடை கிடை த்துள்ளது. ஆகையால் தேவை யான அளவு அரிசி நாட்டில் உள்ளமையினால் இந்த போகம் நிறைவடையும் போது வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு அரசிற்கு ஆலோசனை வழங்க முடியும் என தெரி வித்துள்ளார். மேலும். நாட்டில் எதிர்காலத்திற்கு தேவைப்படும் அரிசியை மாத்திரமே இறக்கு மதி செய்ய முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள் ளார்.

(நி)


## வேலை வாய்ப்பு

பொருத்தமான ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பொருத்தமானவர்களிடம் இருந்து (25-60 வயதுக்குட்பட்டவர்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ முழுப்பெயர் ★ நிரந்தர முகவரி
★ தபால் முகவரி ★ பிறந்ததிகதி
★ பால் ★ விவாகநிலை
★ தே.அ.அ.இல ★ கல்வித்தகைமை
★ மொழித்தகைமை (சிங்களம், ஆங்கிலம்), ★ மேலதிக தகைமை/ அனுபவம்
★ தொலைபேசி இலக்கம் ★ மின்னஞ்சல் முகவரி

உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக விண்ணப்பங்களை,

valampuriijaffna@gmail.com

என்ற மின்னஞ்சல் மூலமாக அல்லது,

வலம்புரி
இல. 3,2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.08.2022

பொதுமுகாமையாளர், வலம்புரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுப்போக நேர்ந்தால் கவலைப்படாதீர்கள். காரணங்களை ஆராய்ந்து பாருங்கள். குறைகள் தெரியும். மீண்டும் முயற்சி செய்யுங்கள்.

– அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## வரிசை காத்து பெற்றோல் வாங்கியது உன் கொடியேற்றம் காண்பதற்கே!

நல்லூர் முருகனுக்கு எழுதப்பெறும் மடல் இது. இன்னமும் எங்களைக் கருத்திலெடுக்கா நல்லூர் முருகனின் பாராமுகம் பற்றியதே இம்மடலின் உள்ளடக்கம்.

**சேரல்**

**நல்லூர்க் கந்தசுவாமி,**

**நல்லூர் இராசதானி**

கந்தப் பெருமானின் திருவடி தொழுதே இம்மடல் எழுதுகின்றோம்.

கைசுப்பி வணங்கி அழுது முறையிட்டாலும் தமிழர் குறை களையா உன் கர்வம் எதற்கானது என்று கேட்பதே இம்மடலின் முன்னுரையாம்.

நல்லூர் முருகா! உன் ஆறுமுகத்தைவிட எங்களைப் பாராமுகமும் உனக்கு உண்டோ! ஒருக்காலேனும் தலைநிமிர்ந்து பார்.

நாம் சொல்வதில் உண்மை இருந்தால் இறங்கி வந்து உதவி செய்.

நேற்று உன் கொடியேற்றம் சிறப்புற நடந்தது. அதைக் காண்பதற்கு அலையெனத் திரண்ட அடியார் கூட்டத்தை கண்ணுற்றிருப்பாய். அவர்கள் அரோகரா என்று எழுப்பிய கோசத்தால் தேவர் உலகமும் அதிர்ந்திருக்கும்.

கைலைநாதப் பெருமானும் எம்பிராட்டியும் நல்லூர் உறையும் தம் மைந்தனின் பெருவிழா தொடங்கிற்று என்று அறிந்திருப்பர்.

இதில் ஒரு செய்தி வழமையிலும் பார்க்க இம்முறை அடியார் கூட்டம் அலைமோதியது.

பொருளாதார நெருக்கடி, பெற்றோல், டீசல் இல்லாத நிலைமை. அதிலும் பெற்றோலுக்காக நீண்ட நெடுந்தூரம் காத்து நிற்கும் பரிதாபம் என்ற ஏகப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் தாண்டி, நடந்தும் தவழ்ந்தும் உன் கொடியேற்றத்தைக் கண்டுவிட வேண்டும் என்ற பேரவாவில் திரண்ட அடியார் கூட்டத்தைக் கண்ணுற்றிருப்பாய்.

கடந்த காலங்களில் நாட்டை முடக்கிய கொரோனாத் தொற்றுக் காரணமாக உன் மகோற்சவத்தைக் கண் குளிரக் காணமுடியவில்லையே என்ற ஏக்கத்தோடு இம்முறை எப்படியும் உன் கொடியேற்றத்தை – மகோற்சவத்தை கண்டுவிட வேண்டும் என்ற காத்திருப்போடு வந்து குவிந்தனர் உன் அடியார்.

தம் குறையெல்லாம் சொல்லி முறையிட்டு உள்ளத்தால் அழுதனர்.

அதிலும் பல்லாயிரக்கணக்கானோர் பல நாள் காத்திருந்து பல மணிநேரம் வரிசை காத்து வாங்கிய பெற்றோல் உன் கொடியேற்றத்துக்கு வந்துபோக என்பதையேனும் நீ அறியாயோ.

சொல்லு நல்லூரா! ஈசானத்தில் எம்மை உருக வைக்கும் திருவாசகம் உன்னை மட்டும் எப்படி விட்டு வைத்தது.

ஓ! சூரனுடன் போரிட்டதால் அவனின் கர்வம் உன்னிலும் ஏறிற்றோ.

ஏன் இன்னும் தாமதம் கிட்டவருவது போன்ற தீர்வு தட்டுண்டு போவது ஏன்?

இக் கொடியேற்றத்தோடேனும் தமிழனுக்கு நாடு, நகர், சுதந்திரம், தன்னாட்சி அத்தனையும் கொடு.

ஆம் உனை நம்பி வாழும் உன் அடியார்க்கு மீட்சி கொடு – ஆட்சி கொடு. அதுவே நம் விண்ணப்பமாம்.

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்பட அனுமதியோம்

## செல்வம் அடைக்கலநாதன்

(மன்னார்)

இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற எந்த செயற்பாட்டையும் தமிழர்களாகிய நாங்கள் ஏற்க மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் இந்தியா பெரும்பங்கு வகிக்கின்றது.

சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் இலங்கை நோக்கி வருகை என்பதை இலங்கை அரசு மற்றும் ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்த மட்டில் இந்தியாவுக்கு பாதுகாப்பு பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளார்கள்.

தற்போது இந்திய மீனவர்களின் வருகை என்பது கவலையான விடயமாக இருந்தாலும் தமிழ் பேசும் சமூகமாகிய நாங்கள் இந்தியாவை ஒரு போதும் கைவிட முடியாது.

அதை விட தமிழ்நாடு இன்றைக்கும் எங்களோடு இருந்து கொண்டிருக்கிறது.

எமது ஈழப் பிரச்சினையில் எமக்காக பல் பேர் தங்களை எரித்து தற்கொலை செய்து இருக்கிறார்கள்.

அப்படியான ஒரு சூழலில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கின்ற சம்பவங்கள் எதுவாக இருந்தாலும் எமது தமிழ் தரப்பு எதிர்க்கும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன் எனத் தெரிவித்தார். (4-285)

## எனது தொலைபேசி உரையாடல் 24 மணிநேரமும் ஒட்டுக் கேட்கப்படுகின்றது

### டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தனது கையடக்கத் தொலைபேசி இருபத்துநான்குமணி நேரமும் ஒட்டுக் கேட்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊடக நிகழ்வொன்றில் பங்குகொண்டபோதே அவர் தனது கையடக்கத் தொலைபேசி உரையாடல்கள் கண்காணிக்கப்படுவதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இதுவரையான சீர்திருத்தங்கள் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளை சிரேஷ்ட ஆலோசகர் பதவிகளுக்கு நியமிப்பது போல் தெரிகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (ம-7)

## சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் வீட்டுக்குமுன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தமோதரம்பிள்ளை வீதிப் பகுதியில் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை இரவு திருட்டுப் போயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சியில் பிற்புகல் 6மணி தொடக்கம் 7.20வரை மின்சாரம் தடைப்பட்ட வேளையிலேயே குறித்த மோட்டார் சைக்கிள் திருட்டு இடம் பெற்றுள்ளது.

பெண் ஒருவர் செலுத்தி வந்து தனது வீட்டு வாசலுக்குள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டிற்குள் சென்ற சமயம் குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

அதேவேளையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பாக சாவகச்சேரி டச் வீதிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்றை சைக்கிளில் வந்த திருடன் சைக்கிளை கைவிட்டு விட்டு திருடிச்சென்ற சமயம் பொலிஸாரைக் கண்டதும் மோட்டார்சைக்கிளை கைவிட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7.30)

## கைது செய்வதை தடுக்க கோரி அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் நீதிமன்றில் மனு தாக்கல்

தாம் கைது செய்யப்படுவதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி, போராட்டக்களத்தில் முன்னின்று செயற்பட்ட அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

தனது சட்டத்தரணியூடாக அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படை தளபதி மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எவ்வித அடிப்படையான விடயங்களும் இன்றி, பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தன்னை கைது செய்ய திட்டமிட்டுள்ளதாக அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக தனது அடிப்படை உரிமை மீறப்படுவதாக உத்தரவிடுமாறும் தாம் கைது செய்யப்படுவதை தடுத்து உத்தரவிடு மாறும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-7)

## நிமல் ஸ்ரீபால டி சில்வா அமைச்சராக பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் ஸ்ரீபால டி சில்வா துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் ஸ்ரீபால டி சில்வாவுக்கு எதிரான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி குழு குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவித்ததை அடுத்து நிமல் ஸ்ரீபால டி சில்வா அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (4)

## லிட்ரோ வெற்று கொள்கலனின் வைப்பு பணம் அதிகரிப்பு

(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்தின் புதிய வெற்று எரிவாயு கொள்கலன் கொள்வனவின்போது, செலுத்தப்படும் வைப்புப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 29 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 2.3 கிலோகிராமுக்கு 7,000 ரூபாவாகவும், 5 கிலோகிராமுக்கு 11,000 ரூபாவாகவும், 12.5 கிலோகிராமுக்கு 14,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 37.5 கிலோகிராமுக்கான வைப்புப் பணத்தொகை 35,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தாய்வானில் தரையிறங்கிய அமெரிக்க சபாநாயகர்

சீனாவின் கடுமையான எச்சரிக்கைகளை மீறி அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு சென்றுள்ளார்.

ஆசிய பிராந்திய சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாகவே அவர் தாய்வானில் நேற்று இரவு தரையிறங்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்த பயணத்துக்கு விருப்பம் வெளியிடாத நிலையில் பெலோசி பயணம் மேற்கொண்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாள் போராட்டத்தின் 2 ஆம் நாள் கிளிநொச்சியில்




(முறிகண்டி)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி 100 நாட்கள் கவனயீர்ப்பு போராட்டத்தின் இரண்டாம் நாள் போராட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மருத்துவமனையை அண்மித்த ஊதிர வைரவர் ஆலயத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நேற்று முன்தினம் முதலாம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப்பொருளில், வடக்கு கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுழற்சி முறையில் இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (4-100-316)

# வீதி சீரின்மையால் மக்கள் போக்குவரத்திற்கு சிரமம்

(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பன் கிராம மக்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு செல்லக் கூடிய வகையில் வீதியினை புனரமையுங்கள் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த ஒரு ஆண்டுகளுக்கு மேலாக முக்கொம்பன் கந்தபுரம் வீதி வழியான பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

முக்கொம்பனுக்கும் கந்தபுரத்திற்கும் இடையிலான மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி குன்றும் குழியுமாக மாறியதன் காரணமாக பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக முக்கொம்பன், நேரடம்பன், அரசபுரம், சின்னப் பல்லவராயன்கட்டு, கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களின் மக்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்குக் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

மேற்படி கிராமங்களில் இருந்து அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்களும் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே நெருக்கடியினை கருத்திற் கொண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்டச் செயலாளர் குறித்த வீதியினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வீதி புனரமைக்கப்பட்டால்தான் முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கு நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையும் நடைபெறும் என பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார். (4-350)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் அனுமதிக்கப்படாத இரவு நேரத்தில் வெளிச்சம் பாய்ச்சி கடலட்டை பிடித்த 15 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தலா பத்தாயிரம் மற்றும் பதினையாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி நாச்சிகுடா கடற்பரப்பில் சட்டத்துக்கு முரணான வகையில் அனுமதிக்கப்படாத இரவு வேளைகளில் வெளிச்சம் பாய்ச்சி கடலட்டை பிடித்த 15 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இதன்போது ஒருவருக்கு 15,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டபாணம் விதிக்கப்பட்டுள்ளது. (4-315)

# ரவி கருணாநாயக்க மன்னாரிற்கு திடீர் விஜயம்

(மன்னார்)

முன்னாள் நிதி அமைச்சரும், ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தருமான ரவி கருணாநாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

விசேட உலங்குவானூர்தி மூலம் நேற்று மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தார். மன்னாரிற்கான திடீர் விஜயம் குறித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போது எவ்வித பதிலும் கூறாமல் அவ் விடத்தில் வந்த வாகனத்தில் ஏறி சென்று விட்டார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் ரி.எஸ்.எப் (T.S.F) என அழைக்கப்படும் தனியார் கடல் உணவு உற்பத்தி நிலைய பிரதிநிதிகளும் வருகை தந்த நிலையில் அவர்களின் வாகனத்திலேயே அவர் அவர்களுடன் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (4-285)

## எரிபொருள் வரிசையில் மோதல்

# புடவை கடை சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் குளப்பிட்டி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் அப்பகுதியில் உள்ள புடவை விற்பனை நிலையமொன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் குறித்த விற்பனை நிலையம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் குறித்த விற்பனை நிலையத்தின் கண்ணாடி கதவுகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த புடவை விற்பனை நிலையத்தின் உரிமையாளரும் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் புடவை விற்பனை நிலைய உரிமையாளரினால் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-33)

# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் பெண் ஒருவர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியா ஈச்சங்குளம் சாலம்பன் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா கல்மடுவ பகுதியை சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த பெண் தமது வீட்டின் பின்புறமுள்ள காட்டுப் பகுதியில் விறகு சேகரித்து கொண்டிருந்த போது விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படும் கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதனால் காய மடைந்த அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது

(தருமபுரம்)

சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராமநாதபுரம் புதுக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 600 லீற்றர் கசிப்பும் 62 போத்தல் கசிப்பும் சிறப்பு அதிரடி[illegible] யினரால் கைப்பற்றப்ப[illegible] துடன் இரண்டு சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு [illegible] ஸார் தெரிவித்தனர். [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 380 | 380 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 280 | 200 |
| கோவா | 350 | 320 | 320 | 350 |
| கரட் | 300 | 300 | 350 | 400 |
| பூசணி | 160 | 160 | 150 | 150 |
| புடோல் | 160 | 100 | 140 | 200 |
| வாழைக்காய் | 160 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 380 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 250 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 300 |
| லீக்ஸ் | 250 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 160 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 400 | 400 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | — | 250 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 250 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 140 | 100 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 பேர் மரணம்...

இந்த இறப்புக்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரை. பதிவான கொரோனா இறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 16,566 ஆக அதிகரித் துள்ளது. (ம-7)

## முன்னாள்...

கொழும்பின் புறநகரான முல்லே ரியா - வங்கிச்சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் குறித்த நபர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-7)

## வெள்ளிக்கிழமை...

இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை விடுமுறை வழங் குவதற்கான சுற்றறிக்கையை இரத் துச் செய்வதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. (ம-7)

## சர்வகட்சியில்...

மைப்பு வெளியில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங்காமல் அதில் பங்காளி யாக இணைய வேண்டும் என அழைப்பு விடுத்தார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

நேற்று துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிர மாணம் செய்துகொண்ட நிமல் சிறி பால டி சில்வா, சர்வகட்சி அரசு தொடர் பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும்போதே மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“பொருளாதாரம், அரசியல் என அனைத்துத் தேசிய பிரச்சினைகளுக் குத் தீர்வுகாண சர்வகட்சி அரசு நிறு வப்பட வேண்டும் எனவும், அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கும் என்றும் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தன் தெரிவித் துள்ள கருத்து அனைவராலும் வர வேற்கத்தக்கது.

ஆனால், ஜனாதிபதி தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளி யில் இருந்து ஆதரவு மாத்திரம் வழங் காமல் அதில் பங்காளியாக இணைய வேண்டும். அப்போதுதான் தீர்வுக் காகக் காத்திருக்கும் மக்களுக்குச் சேவையாற்ற முடியும்” என்றார். (ம-7)

## கூட்டமைப்பினர்...

விரைவில் எடுக்கப்படும் என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார்.

அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வி யில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விரைவில் கூட்டமைப்பினர் ஒன்று கூடி இது குறித்த இறுதி முடிவு எடுக் கப்படும்.

பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வகட்சி அரசாங்கம் ஒரு வழிமுறை யாகும். அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கத் தயாராக இருக்கிறது.

ஆனால் எந்த வகையிலான ஆதர வினை வழங்குவது என்பது கட்சி யாகவே தீர்மானிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## கோவிட் மீண்டும்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சு இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி சுகாதார வழி காட்டுதல்களை வெளியிட்டுள்ளது டன், அந்த அறிவுறுத்தல்களை முறை யாகப் பின்பற்றுமாறு மக்களைக் கேட் டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க, நாட்டில் மீண்டும் கோவிட் தொற்று பரவுவதற்கு இடமளிக்கக் கூடாது என வலியுறுத்தினார்.

“கோவிட்-19 நோயாளிகள் மற்றும் இறப்பு எண்ணிக்கை மீண்டும் அதி கரித்து வருகிறது.

இதைப் பார்க்கும்போது இன்னொரு விடயமும் தெரிகிறது. அதாவது கோவிட் தடுப்பூசியை உடனடியாக வழங்க வேண்டும்.

மேலும் “குரங்கம்மை” தொற்று நோய் தொடர்பிலும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதுவரை அது இலங்கைக்கு வர வில்லை. இந்நோய் இலங்கைக்கு வராமல் தடுக்க முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் சிகிச்சை அளிக்க திட்டமிடப்பட்டு வரு கிறது. இந்த நேரத்தில் ஆரோக்கி யத்தைப் பற்றி சிந்தித்து செயற்படுங் கள். இந்த நாட்டில் கோவிட் தொற்று நோய்க்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டாம் என்று அனைத்து தரப் பினரையும் கேட்[illegible] தெரிவித்தார். (ம-7)

## வன்முறை மூல...

கொழும்பில் எதிர்க்கட்சித் தலை வரின் செயலகத்தில் சட்டத்தரணிகளு டன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனநாயகத்தை மதிக்காத புதிய தோற்றத்தை அரசாங்கம் சமூகத்திற் குள் உருவாக்கியுள்ளது. இதனால், அதற்கு எதிராக வலுவாக குரல் கொடுக்க வேண்டும். ஜனநாயகத் திற்காக குரல் கொடுக்கும் பொதுச் சமூகம் வீதிகளில் வதைகளுக்கு உள் ளாகி வருகின்றது.

இப்படியான நிலைமையில் சட்டத் தரணிகள் சமூகத்திற்கு பாரதூரமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் வாழும் உரிமைக்காக சட் டத்தரணிகள் வழங்கி வரும் ஒத்து ழைப்புகளுக்கு நன்றிகளை தெரிவித் துக் கொள்கிறேன்.

கொள்கை ஒன்றை கொண்டிருக்க வும் கருத்துக்களை வெளியிடவும் பேச் சுரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் இல்லை என்ற செய்தியை அரசாங் கம் மக்களுக்கு வழங்க முயற்சித்து வருகிறது.

நாட்டின் சட்டத்தரணிகள் சமூகம் மட்டுமன்றி முழு நாட்டு மக்களும் அர சாங்கத்தின் வன்முறைகளுக்கு எதி ரான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் எனவும் சஜித் பிரேமதாஸ கூறி யுள்ளார். (ம-7)

## இந்தி...

மர் நரேந்திர மோடி உறுதி யளித்துள்ளார். இலங்கையின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்ட தினேஷ் குணவர்தனவுக்கு நேற்று அனுப்பி யுள்ள வாழ்த்து கடிதத்தில் அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

அத்துடன் இலங்கை அர சாங்கம், மக்களின் செழிப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்து, விரைவான பொரு ளாதார மீட்சியை காணும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

நம்பகமானநண் பராகவும் நெருங் கிய அண்டை நாடாகவும் இல ங்கை மக்க ளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதர வளிக்கும் என் றும் பிரதமர் மோடி தமது வாழ்த்து செய்தியில் குறிப் பிட்டுள்ளார்.

சீனாவின் விஞ் ஞானக் கப்பல் இலங்கைக்கு வரும் நிலையில் இந்தியா, இலங் கையிடம் அது [illegible] தொடர்பில் அதி ருப்தி வெளியிட்டுள்ள சந்தர்ப்பத்தி லேயே பிரதமர் மோடியின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ம-7)

## சிறுபான்மை...

மிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கோரிக்கை விடுத்துள் ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இத னைத் தெரிவித்த அவர் மேலும் குறிப் பிடுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது உளவியல் ரீதியான யுத்தத் தினை முன்னெடுத்துக் கொண்டிருக் கின்றார்.

ஆர்ப்பாட்டங்களினால் ஜனாதிபதி யாகத் தெரிவான அவர் தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றார்.

போராட்டங்களில் ஈடுபட்டவர் களை தண்டிப்பது ஜனாதிபதியினதும் அவரது அரசாங்கத்தினதும் கடமை யல்ல. மாறாக ஆர்ப்பாட்டங்களில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதே அவர்களின் பொறுப்பாகும் என்றார். (ம-7)

கொவிசெத
திகதி 2022.08.02 | சீட்டிழுப்பு இலக்கம் 3077
C 17 27 43 52
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1183
X 21 03 13 27 35

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 144
மேஷம் 07 11 29 40 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2022/08/02
சீட்டிழுப்பு இலக்கம் 4835
Y 5 3 4 4 1 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.08.02
சீட்டிழுப்பு இலக்கம் -865
H 02 15 16 81

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1810 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.08.02 | தினம் செவ்வாய்க்கிழமை
Q 15 17 25 58
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,751,700/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.02
சீட்டிழுப்பு இல : 3971
வர்ணம் : இள நீலம்
ரூ. 3,937,400/-
வெற்றி இலக்கங்கள் 17 18 29 32 F

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 204
சீட்டிழுப்பு திகதி 2022.08.02
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 12 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,678,400/-

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்படாவிட்டால் ரூ. 5,415,900.80
திகதி 2022-08-02
வெற்றி வாரம் 3522
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 17 54 61 62
ரூ. 11,877,700.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 15 05 34 39 48
சீட்டிழுப்பு வாரம் 986
2022.08.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 251,225,089/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1636
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.02
ரூ. 2,974,560/-
வெற்றி இலக்கங்கள் 20 22 27 36 M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12329)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12336)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெண்களுக்கு தனி வரிசை

## யாழ். மாவட்ட செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெண்களுக்கு என தனியான வரிசையை ஒழுங்கு செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குமுறையில் வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன்.

பொதுமக்களுக்கு என ஒரு வரிசை, பெண்களுக்கு என ஒரு வரிசை, உத்தியோகத்தர்களுக்கு என ஒரு வரிசை என ஒழுங்கு முறையை ஏற்படுத்தி செயற்பட வலியுறுத்தி இருக்கின்றோம். அதனை நடைமுறைப் படுத்துவது எரிபொருள் நிரப்பு நிலைய முகாமைத்துவத்தின் கடமையாகும். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (ம-7)

## அத்தியாவசிய...

வித்துள்ளாது.

நாட்டில் அரிசி, மா, சீனி, பருப்பு, நெத்தலி கருவாடு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாக வர்த்தக அமைச்சகத்தின் செயலாளர் எஸ்.டி கொடிகார தெரிவித்துள்ளார்.

மேலும், அத்தியாவசியப் பொருட்களை தேவைக்கு ஏற்ப மீள் இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10 பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

**காணி விற்பனைக்கு**

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்) (C-4695)

தொலைபேசி:
077 977 3732

**வேலையாள் தேவை**

நல்லூரில் அமைந்துள்ள பூங்கன்று விற்பனை நிலையம் ஒன்றைப் பராமரிப்பதற்கு அனுபவம் உள்ள ஆண் ஒருவர் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும். (12330)

077 836 2408

**பௌதிகவியல் (Physics)**

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
(Personal and group classes) (12332)

076 157 0107

**காணி விற்பனைக்கு**

யாழ். நாவற்குழி சந்தியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (12311)

076 490 5403, 076 491 2493, 076 490 6029

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-4659)

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4659)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS

0777-068-777

# மரண அறிவித்தல்

## செல்லையா சண்முகரெத்தினம்

( ரெத்தினம் )

பிறப்பு : 06.09.1955 இறப்பு : 01.08.2022



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகரெத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (01.08.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சதீஸ்குமார் (அவுஸ்திரேலியா), சத்தியேஸ்வரி (பிரான்ஸ்), நிஷாந்தி, சிந்துஜெயன் (பிரான்ஸ்), றேணுகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சச்சிதானந்தம் (துரை - துரை பல்பொருள் வாணிபம்), காலஞ்சென்றவர்களான கருணாகரன், இந்திரகுமார் மற்றும் மயில்வாகனம் (மயில் - தாரணி புடவையகம்), நகுலேஸ்வரி (மட். செங்கலடி), இராசேஸ்வரி, மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சினிதேவி, சுலோசனாதேவி (மட். செங்கலடி), காலஞ்சென்ற பத்மாதேவி, மகேந்திரன் (மட். செங்கலடி), மகேந்திரம், எலிசபெத் (லண்டன்), காலஞ்சென்றவர்களான கணேசையா, கனகசுந்தரம், கனகலிங்கம் மற்றும் கெங்காதேவி, காலஞ்சென்றவர்களான கருணாகரன், தயாநிதி மற்றும் கண்ணன் (கண்ணப்பா), குஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலரிஷி (அவுஸ்திரேலியா), ரமேஷ் (பிரான்ஸ்), கஜிந்தன், தர்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சானுகன் (அவுஸ்திரேலியா), கவினுகன் (அவுஸ்திரேலியா), றக்சிகா (பிரான்ஸ்), கரீஸ் (பிரான்ஸ்), ரித்விகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.08.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
077 471 0786
077 454 8899
குடும்பத்தினர் (12334)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இலட்சுமணன்

(ஓய்வுபெற்ற உப அதிபர், இணைந்த கணித ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)



வழுப்போடை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் தற்போது 442, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இலட்சுமணன் கடந்த 01.08.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு இளைய மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் ஞானசௌந்தரம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் சபாரத்தினம் (பாணந்துறை), அமரர் விமலச்சந்திரன் (பாணந்துறை), அமரர் இராமன் (கண்டி), கனகாம்பிகை, கணேசபிள்ளை (ஜேர்மனி), அமரர் அரியரட்ணம், கனகமலர் மற்றும் அமரர் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவரஞ்சனாவின் (ராணி) அன்புக் கணவரும் லவன் (சிங்கப்பூர்), கௌசிகன் (சிங்கப்பூர்), ஆரூரன் (M.I.T மூன்றாம் வருட மாணவன், களனிப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருத்திகாவின் (உதவிச் செயலாளர், மாகாண கல்வி அமைச்சு, ஊவா மாகாணம்) பாசமிகு மாமனாரும் நிறஞ்சனா (ரதி - கனடா), சத்தியசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2022) வியாழக்கிழமை மு.ப 8 மணியளவில் இல.442, கே.கே.எஸ் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அன்னாரது பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.442,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (12335)

தகவல்: மனைவி, பிள்ளைகள்
077 363 6436, 077 314 4866,
077 778 5170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.